# ராமகிருஷ்ணா வித்யாலயத்தில் அறிவியல் கண்காட்சி

**பெ.நா.பாளையம்** ● **அக். 17–** பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில், இரண்டு நாள் அறிவியல் கண்காட்சி நடந்தது.

பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரி, அறிவியல் பேரவை சார்பில், "வியப்பூட்டும் விஞ்ஞான வித்தைகள்" என்ற தலைப்பில் இரண்டு நாள் அறிவியல் கண்காட்சி நடந்தது.

கண்காட்சியை சுவாமி புண்ணியவரதானந்தா துவக்கி வைத்தார். இதில், கல்லூரியின் கணக்கு, இயற்பியல், வேதியியல், மின்னணுவியல், கணினி அறிவியல் மற்றும் ஆங்கிலம் பயிலும் மாணவர்கள், தங்கள் துறை சார்ந்த அறிவியல் கொள்கைகள், அண்மை கால கண்டுபிடிப்புகளை விளக்கும் செயல்விளக்க மாதிரிகளை, பார்வைக்கு வைத்திருந்தனர்.

மேலும், விவசாயத் துறையின் முக்கியத்துவம், உதவும் மனப்பான்மை, இளைய தலைமுறையினர் தவிர்க்க வேண்டிய பழக்க வழக்கங்கள் தொடர்பான குறும்படமும் திரையிடப்பட்டது.

கண்காட்சி மாதிரிகள், ஒன்பதாம் வகுப்பு முதல் பிளஸ், 2 வரையிலான அறிவியல் பாடத்திட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியை அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த, 1,300 மாணவ, மாணவியர் பார்வையிட்டனர்.

ஏற்பாடுகளை வித்யாலய கலை, அறிவியல் கல்லூரி செயலாளர் சுவாமி கரிஷ்டானந்தர், முதல்வர் ஜெயபாலகிருஷ்ணன் தலைமையில் வித்யாலய பேராசிரியர்கள், மாணவர்கள் செய்து இருந்தனர்.

# பெரியநாயக்கன்பாளையத்தில் மனிதநேய வார விழா

**பெ.நா.பாளையம், ஜன.29:** கோவை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் மனிதநேய வாரவிழா பெரியநாயக்கன்பாளையத்தில் நடைபெற்றது.

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி சமூகப் பணித் துறையோடு இணைந்து நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அதிகாரி மோகன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக கோவை வடக்குத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார் கலந்து கொண்டு அரசின் நலத் திட்டங்கள் குறித்து விளக்கினார். தொடர்ந்து கல்லூரியின் இயற்பியல் துறைத் தலைவர் பொன்னுசாமி 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற தலைப்பில் பேசினார். இதனையடுத்து கல்லூரியின் செயலர் சுவாமி கரிஷ்டானந்தர் ஆசியுரை வழங்கினார்.

விழாவில், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் கனகராஜ், சமூகப் பணித் துறை பேராசிரியர்கள், கல்லூரி முன்னாள் முதல்வர் கந்தப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




விழாவில் பேசுகிறார் கோவை வடக்குத் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார்.

# திருநங்கைகளுக்கு ஓட்டுநர் பயிற்சி

பெ.நா.பாளையம், செப். 29: பெரியநாயக்கன்பாளையத்திலுள்ள ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரி சார்பில் திருநங்கைகளுக்கான வாகன ஓட்டுநர் பயிற்சி முகாம் தொடங்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரியின் சமூகப் பணித் துறையும், மத்திய அரசின் தேசிய பாதுகாப்புத் துறையும் இணைந்து இந்த ஓட்டுநர் பயிற்சி முகாமை நடத்துகின்றன.

இதில், கோவை மாவட்டத்தில் வசிக்கும் 50 திருநங்கைகளுக்கு நான்கு சக்கர வாகன ஓட்டுநர் பயிற்சி, நான்கு சக்கர வாகன அடிப்படை இயந்திரத் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவை வழங்கப்படவுள்ளன.

இதன் தொடக்க விழாவுக்கு கல்லூரி முதல்வர் ஜெயபாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். செயலர் சுவாமி கரிஷ்டானந்தா தலைமை வகித்து குத்துவிளக்கேற்றி பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.



ராமகிருஷ்ண வித்யாலயத்தில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான வாகன ஓட்டுநர் பயிற்சியை குத்துவிளக்கேற்றி வைக்கிறார் கல்லூரிச் செயலர் சுவாமி கரிஷ்டானந்தா.

திருநங்கைகள் ஜானகி, லட்சுமி, பூங்குழலி, பத்மினி பிரகாஷ் வழக்குரைஞர் விக்டர், கல்லூரியின் சமூகப் பணித் துறைத் தலைவர் நாகராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# திருநங்கைகளுக்கு மெக்கானிக் பயிற்சி

**பெ.நா.பாளையம் ● செப். 30–**

பெரியநாயக்கன்பாளையம் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய வளாகத்தில், திருநங்கைகளுக்கான நான்கு சக்கர வாகன மெக்கானிக் பயிற்சி துவங்கியது.



பெரியநாயக்கன்பாளையத்தில் திருநங்கைகளுக்கான நான்கு சக்கர வாகன ஓட்டுநர் உரிம பயிற்சியை, சுவாமி கரிஷ்டானந்தாஜி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரி சமூக பணித்துறையும், டில்லியில் உள்ள மத்திய அரசின் சமூக நீதித்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும், தேசிய சமூகபாதுகாப்பு நிறுவனமும் இணைந்து, கோவை மாவட்டத்தில் உள்ள, 50 திருநங்கைகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சியாக, நான்கு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் நான்கு சக்கர வாகன அடிப்படை இயந்திர தொழில்நுட்பம் பயிற்சி வழங்குகிறது.

பயிற்சியை வித்யாலய கலை, அறிவியல் கல்லூரி செயலாளர் சுவாமி கரிஷ்டானந்தாஜி துவக்கி வைத்தார். விழாவில், மூத்த திருநங்கைகள், ஜானகி, லட்சுமி, பூங்குழலி, திருநங்கைகளின் சட்ட ஆலோசகர் விக்டர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.